**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

P.W.–6

O.S.No.396/2015

2025 ம் ஆண்டு ஜுன் மாதம் 25 ம் நாள் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி திரு.கே.ஆர். கண்ணன், பி.ஏ., பி.எல்., கூடுதல் சார்பு நீதிபதி, திருப்பூர் அவர்களால் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : திரு. பாலமுருகன் | வயது: 39 |
| த/பெ. : திரு. பழனிசாமி | முகவரி: |
| தொழில் : | |

**முதல் விசாரணை :**

வாதிகள் ஆஜர். 4,5 பிரதிவாதிகள் ஆஜர் இல்லை. வாதி பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். நீதிமன்றத்தில் இருந்து சாட்சி சம்மன் வந்தன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். என்னுடைய ஆதார் அட்டை ஒளி நகல் தாக்கல் செய்கிறேன். அது சா.சா.ஆ–13.

நான் தேங்காய் பறிக்கும் வேலை பார்த்துவருகிறேன். நான் கவுண்டம்பாளையம், அத்திக்குட்டைதோட்டம், அமராவதி பாளையம், புதுபாளையம், ராமையக்கவுண்டம்பாளையம் ஆகிய பகுதிகளில் தேங்காய் பறிப்பதற்காக வேலைக்கு செல்வேன். அத்திக்குட்டை நாய் பன்னை ஊஷா, மணிவண்ணனனுக்கு பாத்தியம். 60 நாட்களுக்கு ஒரு முறை அவர்களுடைய சொத்திற்கு நான் செல்வேன். 60 நாட்களுக்கு ஒரு முறை அவர்கள் போன் செய்வார்கள். தேங்காய் பறித்து முடித்தபிறகு அவர்கள் சம்பளம் கொடுப்பார்கள். அவர்களுடைய சொத்தில் 150 தென்னை மரங்கள் உள்ளது. 6, 7 வருடங்களாக அவர்களுடைய சொத்திற்கு சென்று வருகிறேன். அதற்கு முன்பு என்னுடைய அப்பா சென்று வந்தார். 25 வருடங்களாக அவர் அவ்வாறு செய்து வந்தார். எனக்கு தேங்காய் பறிப்பதற்கான கூலியை ஊஷா, மணிவண்ணனும் கொடுப்பார்கள். கடைசியாக மே மாதம் 30 ம் தேதி அவர்களுடைய சொத்திற்கு சென்றேன். 57 மரத்திற்கு தேங்காய் பறித்தேன். அந்த தோட்டத்தில் நாய் பண்னை

உள்ளது. ஆடு, மாடு, கோழி உள்ளது, கொய்யா மரம், மாமரம் உள்ளது. 60 நாட்களுக்கு ஒரு அழைப்பார்கள் நான் அங்கு சென்று தேங்காய் பறிப்பேன்.

**5 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் எங்கு வசித்து வருகிறேன் என்றால் ராமையகவுண்டன் பாளையத்தில் வசித்து வருகிறேன். நான் வசிக்கும் வீட்டிற்குரிய குடும்ப அட்டை தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. வாதிகள் தாவாவில் சாட்சியம் அளிக்கும்படி இன்று கூட்டி வந்தார்களா என்றால் இல்லை. சாட்சியம் அளிக்கும்படி கேட்டார்களா என்றால் இல்லை. சாட்சியம் அளிக்க வரமுடியாது என்று நான் மறுத்தேனா என்றால் இல்லை. வாதிகளின் சொத்தை பொறுத்து நீதிமன்றத்தில் வழக்கு உள்ளது என்பது எனக்கு எப்போது தெரியும் என்றால் 5 வருடங்களுக்கு முன்பு தெரியும். வழக்கு விவரங்கள் தெரியுமா என்றால் தெரியாது. தேங்காய் விலைக்கு வாங்கும் வேலை நான் செய்யவில்லை என்றால் சரி.

2. வாதிகளின் போன் நம்பர் தெரியுமா என்றால் தெரியும். அந்த சொத்தில் எத்தனை வீடுகள் உள்ளது என்றால் ஒரு வீடு உள்ளது. அந்த சொத்தில் என்ன பயிர் உள்ளது என்றால் பாதி சோளப்பயிர், மாமரம், கொய்யாமரம், பலாமரம் உள்ளது. பூச்செடிகள் நியை உள்ளது. ஆடு, மாடு, கோழி உள்ளது. அந்த சொத்து ஆடு, மாடு மேய்க்கும் மேய்ச்சல் நிலமா என்றால் ஆமாம். ஆடு, மாடு மேய்ச்சல் நிலத்தில் விவசாயம் செய்யமாட்டார்கள் என்றால் சரி. 1,2 வாதிகளின் கூலியாக தொகைப்பெற்றுக்கொண்டதற்கு ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. எந்த தோட்டத்திற்கும் ஆவணம் வாங்கமாட்டோம். தாவா சொத்தை பொறுத்து அங்கு சென்று தேங்காய் பறிப்பதற்கே வாய்ப்பு இல்லை என்றால் தவறு.

3. எனக்கு விவசாய பூமி சொந்தமாக உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்து யார் பெயரில் உள்ளது என்பதற்கு ஆவணங்கள் பார்த்துள்ளீர்களா என்றால் இல்லை. இன்றைய சாட்சியதிற்கு முன்பு 1 ம் வாதிக்காக காவல்நிலையத்திலோ, வேறு நீதிமன்றத்திலோ சாட்சி அளித்துள்ளேனா என்றால் இல்லை. 1 ம் வாதி தாவா சொத்து பிரச்சனை ஏற்பட்டுள்ளது. அதற்காக புகார் கொடுக்கவேண்டும் என்று என்னிடம் சொன்னரா என்றால் இல்லை. நான் தேங்காய் பறிப்பதற்காக செல்லும் இடங்களில்

செல்லும் போது யாராவது டிராக்கருடன் வந்து மறித்துள்ளார்களா என்றால் நான் பார்க்கவில்லை. எனக்கு தேங்காய் பறிப்பதற்காக வேலையே தெரியாது. வாதிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பொதுவாக தேங்காய் வியாபாரிகள் தான் ஆட்களை வைத்து தேங்காயை பறிப்பார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் வாதிகள் சுவாதீனத்தில் இல்லை அனுபவத்திலும் இல்லை என்றால் தவறு. 1ம் வாதிக்கு நான் நெருங்கிய நண்பர் என்பதால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

4ம் பிரதிவாதி இதே குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2025.06.25 18:26:55 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.